[25th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்புகூறிய விடையைத் தான் கூற வேண்டும். அட்வகேட்-ஜெனரலின் அபிப்பிராயத்தை கோரியிருக்கிறோம். அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பது அட்வகேட்-ஜெனரல் கூறும் கருத்தைப் பொறுத்தது.

Loan to cashew cultivators

* 326 Q.—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the amount distributed as loan to the cultivators of cashewnut in the State during 1964?

THE HON. SRI P. KAKKAN : The total amount of loan disbursed to cashew cultivators in this State during the period from 1st April to 31st December 1964 was Rs. 3,19,740.

இம் மாநிலத்தில் 1-4-1964 முதல் 31-12-1964 வரையில் முந்திரி பயிரிடுபவர்களுக்கு வழங்கிய மொத்தக் கடன் தொகை ரூ. 3,19,740 ஆகும்.

திரு. ஆ. கு. சுப்பையா : மாவட்ட வாரியாக அமைச்சர் விவரம் கூறுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : மாவட்ட வாரியாக விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, முந்திரி பயிரிடுவதற்கு கொடுக்கப்படும் கடன் எத்தனை ஆண்டுகளுக்குள் வசூலிக்கப்படும் ? வட்டி விகிதம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : வட்டி விகிதம் 5½ சதவிகிதம். 6-வது வருடத்திலிருந்து கடன் திருப்பி கொடுப்பது ஆரம்பம் ஆகும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முந்திரி பயிரிடுவதற்கு கடன் கொடுப்பது போல, பலா பயிரிடுவதற்கும் கடன் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. சா. கணேசன் : ஆறுவது வருஷத்திலிருந்து கடன் திருப்பிக் கொடுப்பது ஆரம்பம் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 6-வது வருஷம் ஆரம்பம் என்றால், எத்தனை வருஷங்களில், எத்தனை தவணைகளில் தீர்க்கப் பெற வேண்டும் ?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, அளிக்கப்படுகிற கடன் சரியாக பயன்படுத்தப்படுகிறதா என்று அறிய என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்காக விவசாய இலாகா அதிகாரிகள் முந்திரி பயிரிடப்படுகிறதா, இல்லையா, அந்தந்த பிராந்தியங்களிலே நன்றாக பயன்படுத்தப்படுகிறதா, கொடுத்த கடன் நல்ல முறையிலே உபயோகப்படுத்தப்படுகிறதா என்று பார்த்துக் கொண்டுவருகிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இந்த முந்திரி பயிரிடுவதற்கு அரசாங்கம் நல்ல ஊக்கம் கொடுக்கிறது. எந்தெந்த ஜில்லாக்களில் இந்த முந்திரி பயிரிடப்படுகிறது? ஏதாவது, டிபார்ட்மெண்ட் ரிசர்ச் செய்து, இந்திந்த மண் வளத்தில்தான் முந்திரி பயிர் செய்ய முடியும் என்ற விவரம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : எந்தெந்த வட்டாரத்திலே முந்திரி பயிரிட வாய்ப்பு இருக்கிறதோ, அதைப் பார்த்து திண்டிவனம், புதுக்கோட்டை, பரமக்குடி ஆகிய இடங்களில் ரிசர்ச் ஸ்டேஷன் வைத்து முந்திரி பயிரிட ஏற்பாடு செய்து வருகிறார்கள். குறிப்பாக ராமனுதபுரத்தில் 10,000 ஏக்கரை முந்திரி பயிரில் கொண்டு வரவேண்டும் என்று அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது. முந்திரி பயிரிட மண்வளத்தைப் பார்த்து எங்கு மண் வளம் நன்ருக இருக்கிறதோ அங்கெல்லாம் முந்திரி பயிரிட அரசாங்கம் பிரயத்தினம் செய்து வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த முந்திரி சாகுபடிக்கு கொடுத்த கடன் எத்தனை ஏக்கருக்கு கொடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : 1-4-1964 முதல் 31-12-1964 வரை 1,392 ஏக்கருக்கு கடன் கொடுத்து இருக்கிறார்கள். அதன் பிறகு 2,929 ஏக்கருக்கு கொடுத்து இருக்கிறது. மொத்தமாக ராமனுதபுரத்தில் 12,442 பவுண்டு விதை கொடுத்து முந்திரி சாகுபடி நடத்த ஏற்பாடு செய்து இருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : முந்திரிச் செடி பயிரிடுவதற்காக மானியம், கடன் ஆகியவை கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். இதனுல் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? முந்திரி ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறதா? இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : செலவை எடுத்துக் கொண்டால் முதலில் 8.52 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதன் பிறகு 1,11,370 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். பிறகு 2,80,240 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இதனுல் பலன் ஏற்பட்டிருக்கிறது. தென்னுற்காடு ஜில்லாவில் முந்திரிச் செடி பயிரிடப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு நேரில் சென்று பார்த்தால் இதைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும். இராமநாதபுரத்திலும் முந்திரிச் செடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் இதிலே ஊக்கம் காட்டுகிறார்கள். இதனுல் நல்ல நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை நேராகச் சென்று பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : நமது மாநிலத்திலிருந்து அந்நிய நாடுகளுக்கு எவ்வளவு முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது? ஆண்டுக்கு ஆண்டு அது அதிகப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாநிலத்தில் முந்திரிச் செடிகளை அதிகமாக வளர்த்து அந்நிய நாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலாவணியைப் பெருக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். எவ்வளவு

[25th March 1965

தூரம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, ஏமாற்றுகின்ற முறையில் இந்த முந்திரிச் செடி பயிரிடப்படுகிறது என்பது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அபிப்பிராயம் அப்படி இருக்கலாம். அப்படி ஒன்றும் ஏமாற்றவில்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : முந்திரி பஞ்சப் பயிர் மழை இல்லாத பகுதிகளில் போடப்பட வேண்டியது. நல்ல வளமுள்ள மண் இருக்கும் பகுதிகளிலும் இதைப் பயிரிடுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே எங்கு மழை இல்லாத பகுதி இருக்கிறதோ அங்கே மட்டும் இந்த முந்திரியைப் பயிரிடுவதற்குச் சலுகைகள் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கு பஞ்சம் இருக்கிறதோ அங்கு இதைப் பயிரிட வேண்டுமென்பதில்லை. இந்த முந்திரிச் செடிக்குச் சாதகமான நிலைமை எங்கு இருக்கிறதோ அங்குதான் இது பயிரிடப்படுகிறது. கிழக்கு இராமநாதபுரம் கஷ்டத்தில் இருக்கும் பகுதி. அங்கே பத்தாயிரம் ஏக்கரில் முந்திரி சாகுபடிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : முந்திரிச் செடி நட்டு எத்தனை ஆண்டுகளில் பலன் கிடக்கும்?

கனம் திரு. பூ. கக்கன் : ஆறு வருஷங்களுக்குப் பிறகுதான் கடனைக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, பலன் கொடுக்க ஆறு ஆண்டுகள் ஆகும் என்று நினைக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சாவூர் முந்திரிப் பருப்பு நல்ல பருப்பு என்று சொல்வார்கள். தஞ்சையிலிருந்து புதுக்கோட்டை வரையில் அந்தப் பிரதேசத்தில் நல்ல முறையில் முந்திரி சாகுபடி செய்திருக்கிறார்கள். அந்தப் பிரதேசத்தில் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சை ஜில்லாவிலே உள்ளவர்கள் உண்மையிலேயே முந்திரிச் செடி வளர்ப்பதிலே ஆர்வம் காட்டி வருகிறார்கள். கனம் அங்கத்தினர் சொன்ன பகுதியை அரசாங்கம் கவனித்து வருகிறது. அங்குள்ள விவசாயிகள் விண்ணப்பித்துக் கொண்டால் தகுந்த உதவி செய்ய முடியும்.

Distribution of cashew seeds

* 327 *Q.*—Sri K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of cashew seeds distributed during 1963–64 under the Free Distribution Scheme?